*கவனிக்க.*-2020.03.06 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2167 - 2020 මාර්තු මස 13 වැනි සිකුරාදා - 2020.03.13

*2167 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 518 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - |
| உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 519 |
| அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| ஏல விற்பனைகள் | 523 |
| நானாவித அறிவித்தல்கள் | |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2020, ஏப்பிறல் மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, மாச்சு மாதம் 20 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*.'ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

*காணி அமைச்சு*

*இலங்கை நில அளவைத் திணைக்களம்*

**விலைமனுக் கோரல்**

*பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல் - 2020*

*கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை இரண்டு வருட காலத்திற்கு வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகங்களில் விலைமனுக்கோரல்கள் 2020.04.20 ஆந் திகதி அன்று பிற்பகல் 2.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் விலைமனுக்கோரல்கள் பி. ப. 2.05 மணிக்குத் திறக்கப்படும்.*

| மாகாணம் | மாவட்டம் | பிரதேச நில அளவை அலுவலகம் | கேள்வி மனு ஒப்படைத்தல் | அருகில் உள்ள நகரம் | தேவைப் படும் திகதி |
|---|---|---|---|---|---|
| மேல் மாகாணம் | கொழும்பு | கொழும்பு | மாகாண நில அளவையாளர் நாயகம் (மேல் மாகாணம்), | கொலன்னாவ,பத்தர முல்ல, கோட்டே, | 2020.05.01ஆந் திகதியில் இருந்து 02 வருடங்களுக்கு |
| | | | மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகம், நாராஹேன்பிட்ட. | பன்னிப்பிட்டிய நகருக்கு அருகில் | |
| மேல் மாகாணம் | கம்பஹா | ஜா-எல | மாகாண நில அளவையாளர் நாயகம் (மேல் மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகம், நாராஹேன்பிட்ட | ஜா-எல நகருக்கு அருகில் | 2020.05.01ஆந் திகதியில் இருந்து 02 வருடங்களுக்கு |

**பூரணப்படுத்தப்பட வேண்டிய பொதுவான தேவைப்பாடுகள் :**

*அனைத்து கட்டிடங்களும் பாதுகாப்பு சுற்று மதில் அல்லது கம்பி வேலி மூலமாக பாதுகாக்கப்பட்டிருத்தல் வேண்டும். தண்ணீர்க் குழாய் வசதியினைக் கொண்டிருப்பதுடன் அழுக்குகள் மற்றும் வடிநீர் செல்வதற்கான முறையான வடிகாலமைப்பு இருத்தல் வேண்டும். தனியான நீர்மானி மற்றும் மின்மானி என்பன வேறு வேறாக பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். உரிய இடத்திற்கு அண்மித்த பிரதேசங்களில் இருந்து அதிக ஒலியை எழுப்பக்கூடிய தொழிற்சாலைகளோ அல்லது அது போன்ற வேறு ஏதாவது பட்டறைகளோ இல்லாதிருத்தல் வேண்டும். கட்டிடம் ஸ்தாபிக்கப்பட்டிருப்பது பெருந்தெருவுக்கு அண்மித்ததாக இல்லாதிருப்பின் அதற்குச் செல்வதற்கு முறையான போக்குவரத்துப் பாதை இருத்தல் அவசியமாகும். குறைந்தபட்சம் மூன்று வண்டிகள் நிறுத்தி வைக்கக்கூடிய இடவசதியும் அத்துடன் வாகனத் தரிப்பிட வசதியும் இருத்தல் வேண்டும். அதிகாரிகள் 10 பேருக்கு போதுமான அறைகள் கொண்ட இடவசதி இருத்தல் வேண்டும்.*

*கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை பூரணப்படுத்த வேண்டிய பொதுவான தேவையான சகல விபரங்களுடனான மனுக்கோரல்கள் அது அடங்கிய தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "பிரதேச நில அளவை அலுவலகங்களை வாடகைக்குப் பெறுதல் (இடத்தின் பெயர்)" எனக் குறிப்பிட்டு 2020.04.20 ஆந் திகதியன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகத்திற்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படவோ அல்லது நேரடியாக கையளிக்கப்படவோ வேண்டும்.*

எஸ். டீ. பீ.ஜே. தம்பேகம,
*நில அளவையாளர் நாயகம்.*

*நில அளவையாளர் நாயகம் அலுவலகம்,*
*கிருல வீதி,*
*கொழும்பு 5,*
*2020.02.24.*

**பிரதேச நில அளவை அலுவலகங்களுக்குக் கட்டிடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல் - 2020**
**விலைமனுக் கோரல் விண்ணப்பப்படிவம்**

**கட்டிட உரிமையாளரின்:**

01. முழுப்பெயர் :----.
02. முகவரி :----.
03. தொலைபேசி இலக்கம் :----.
04. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

**கட்டிடம் தொடர்பாக :**

01. எந்த பிரதேச நில அளவை அலுவலகத்திற்காக கட்டிடம் வாடகைக்கு வழங்கப்படவுள்ளது? ----.
02. மாதாந்த வாடகைத் தொகை ? ----.
03. ஸ்தாபிக்கப்பட்டுள்ள இடத்தின் முகவரி: ----.
04. உரிய நகரத்தில் இருந்து ஸ்தாபிக்கப்பட்டுள்ள இடத்திற்கு உரிய தூர அளவு கி. மீ : ----.
05. இடத்தின் விஸ்தீரணம் : ----.
06. கட்டிடத்தின் சதுர அடியும் அறைகளின் எண்ணிக்கை தொடர்பான விபரங்களும் :----.
07. தனியாக அவதானிக்கக் கூடிய நீர்மானி பொருத்தப்பட்டுள்ளதா? ----.
08. தனியாக அவதானிக்கக்கூடிய மின்மானி பொருத்தப்பட்டுள்ளதா? ----.
09. பாதுகாப்பு எல்லை தொடர்பான விபரம் (மதில் /கம்பி வேலி/. . . . . . ): ----.
10. நிறுத்தி வைக்கக்கூடிய வாகனங்களின் எண்ணிக்கை : ----.

மேலே என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை என்றும், வழங்கப்பட்டுள்ள தகவல்கள் தவறானவை எனத் தெரியவரும் பட்சத்தில் என்னால் அனுப்பப்பட்டுள்ள இந்த விலைமனு நில அளவையாளர் நாயகத்தினால் நிராகரிக்கப்படும் என்பதனை நான் நன்கு அறிவேன் என்றும் இத்தால் அறியத் தருகின்றேன்.

விண்ணப்பதாரியின் கையொப்பம்.

3-543

## உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

### பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் பிரகாரம் கீழ்க்காணும் கம்பனி கீழே விபரிக்கப்பட்டுற்றவாறு கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் வழங்கப்படுகின்ற அறிவித்தல்.-

கம்பனியின் பெயர் : சிலோன் சினமன் குரோவர்ஸ் (பிரைவட்) லிமிட்டட்
கம்பனியின் இல.: பீவீ 00219988
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2019.02.05
பதிவு செய்யப்பட்ட அலுவலகம் : இல. 2/31, பீரிஸ் எவன்யு, களுபோவில, தெஹிவளை, 10350

3- 353

### பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் பிரகாரம் கீழ்க்காணும் கம்பனி கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் வழங்கப்படுகின்ற அறிவித்தல்.-

கம்பனியின் பெயர் :சிக்நேச்சர் ஆயுர்வேத ( பீவீடீ) எல்டீடி
கம்பனியின் இல.: பீவீ 00220425
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2019.02.17
பதிவு செய்யப்பட்ட அலுவலகம் : இல. 12, கங்காதர மாவத்தை, ஓவ் டெம்பிளர்ஸ் வீதி, கல்கிஸ்ஸை, 10350

மரியட்டா சிறீவர்தன,
கம்பனிச் செயலாளர்.

3- 354

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் கம்பனி கூட்டிணைக் கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : ரெஜீஸ் கெப்பிட்டல் (பிரைவட்) லிமிட்டட்
பதிவிலக்கம்: பீவீ 00219455

கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2020.01.17
பதிவு செய்யப்பட்ட அலுவலகம் : 21/2, விஜேராம ஒழுங்கை, கங்கொடவில, நுகேகொடை

பணிப்பாளர்.

3- 372

---

**லீடர் பப்ளிகேஷன் ( பிரைவேட்) லிமிட்டட்**

கம்பனியின் பதிவு இல.PV15200

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 346(1)ஆம் பிரிவின் கீழான கலைப்பாளர் நியமனம் பற்றிய அறிவித்தல்*

| | |
|---|---|
| கம்பனியின் பெயர் | : லீடர்பப்ளிகேஷன் (பிரைவட்) லிமிட்டட் |
| பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி | : இல. 24, கட்டுகுறுந்துவத்த வீதி, இரத்மலானை |
| நீதிமன்றம் | : வர்த்தக உயர் நீதிமன்றம் மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்) |
| வழக்கு இல. | : HC Civil/ 67/ 19/CO |
| கம்பனி கலைப்பாளர் பெயர் | : Gerard Jeevananthan David |
| முகவரி | : Level 3, No. 11, Castle Lane, Colombo 04 |
| நியமனத் திகதி | : 2019.10.21 |

3- 377/1

---

**லீடர் பப்ளிகேஷன் ( பிரைவேட்) லிமிட்டட்**

கம்பனியின் பதிவு இல.PV15200

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் XII ஆம் பிரிவின் கீழான கம்பனி கலைப்பு உத்தரவு பற்றிய அறிவித்தல்*

| | |
|---|---|
| கம்பனியின் பெயர் | : லீடர் பப்ளிகேஷன் (பிரைவட்) லிமிட்டட் |
| பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி | : இல. 24, கட்டுகுறுந்துவத்த வீதி, இரத்மலானை |
| நீதிமன்றம் | : வர்த்தக உயர் நீதிமன்றம் மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்) |
| வழக்கு இல. | : HC Civil/ 67/ 19/CO |
| நீதிமன்ற கட்டளைத் திகதி | : 2019.10.21 |
| கோரிக்கை தாக்கல் செய்த திகதி | : 2019.08.19 |
| கம்பனி கலைப்பாளர் பெயர் | : Gerard Jeevananthan David |
| முகவரி | : Level 3, No. 11, Castle Lane, Colombo 04 |

3- 377/2

---

**தனியார் நிறுவனத்தை கூட்டிணைப்பது தொடர்பாக பகிரங்க அறிவித்தல்**

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் வழங்கப்படும் அறிவித்தல்.-*

கம்பனியின் பெயர் : யுவர் ஓர்கானிக் (f) பார்ம்ஸ் அன்ட் ப்ரொடக்ட்ஸ் (தனியார்) நிறுவனம்
கம்பனியின் பதிவு இலக்கம்: பீவீ 00220331
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2020, பெப்புருவரி 14
பதிவு அலுவலகத்தின் முகவரி: இல. 145, ஆனந்தாராம வீதி, கட்டுபெத்த, மொரட்டுவ

சபையின் கட்டளைப் பிரகாரம்,
சம்பத் சாமிந்த கமகே,
கம்பனிச் செயலாளர்.

3-404

---

**தனியார் நிறுவனத்தை கூட்டிணைப்பது தொடர்பாக பகிரங்க அறிவித்தல்**

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் வழங்கப்படும் அறிவித்தல்.-*

கம்பனியின் பெயர் : ஹெலாகெடோ (தனியார்) நிறுவனம்
கம்பனியின் பதிவு இலக்கம்: பீவீ 00220093
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2020, பெப்புருவரி 07
பதிவு அலுவலகத்தின் முகவரி: இல. 06, பேதிரிஸ் வீதி, கொழும்பு3

சபையின் கட்டளைப் பிரகாரம்,
சம்பத் சாமிந்த கமகே,
கம்பனிச் செயலாளர்.

3-405

---

**பொது அறிவித்தல்**

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242(3) ஆம் பிரிவின் கீழ் சிப்லா பார்மா லங்கா ( பிரைவெட்) லிமிட்டெட் கம்பனியின் பதிவு இல. பீவீ 100158 பிரிதி ப்ரி லங்கா (பிரைவெட்) லிமிட்டெட் கம்பனியின் பதிவு இல. பீவீ 99128 கம்பனிகள் விபரிக்கப்பட்டுள்ளவாறு 2020, மே மாதம் 01 ஆந் திகதி உடன் இணைக்க முன்மொழியப்பட்டது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

பிரீத் ப்ரி லங்கா (பிரைவெட்) லிமிட்டெட் ஒருங்கிணைந்த நிறுவனமாக இருக்கும்.

கோர்ப்பரேட் அட்வைசரி
சேர்விசஸ் ( பிரைவெட்)
லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

3-407

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : மீடியா ஸோன் இன்டர்கிரேடட் (பிறைவட்) லிமிடட்
பதவிலக்கம்: பீவீ 127544
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017.11.23
பதிவு முகவரி: 385/ஏ, கஹஹேன, வக

Media Zone Integrated
(Private) Limited,
கம்பனிச் செயலாளர்.

2020, பெப்புருவரி 07.

3-408

---

### நிறுவனத்தின் பெயர் மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2)ஆம் பிரிவின் கீழ் 2019.12.16 ஆந் திகதி முதல் பின்வரும் கம்பனியின் பெயர் மாற்றப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் முன்னைய பெயர் :டீ பீ டெக்னொலொஜீஸ் (பிரைவேட்) லிமிடெட்
கம்பனியின் புதிய பெயர் : ஃபிளிக்ஸ் 11 டெக்நோலோஜீஸ் (பிரைவட்) லிமிட்டட்
கம்பனி இல.: பீவீ 1728
பதிவு முகவரி: இல. 31, கீல்ஸ் ஹவ்சிங் கொம்ப்ளெக்ஸ், பொதுஹரவ வீதி, மாலபே

கோர்ப்பரேட் அட்வைசரி
சேர்விசஸ் (பிரைவெட்)
லிமிடெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

3-448

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் கம்பனி 2020, சனவரி 25 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டது.-

கம்பனியின் பெயர் : யுனிஃப்ரா டிவெலொப்மென்ட் (பீவீடீ ) எல்டீடி
இலக்கம்: பீவீ 00219710
பதிவு முகவரி: இங்கிரிய வீதி, மீபே, பாதுக்க

யுனிஃப்ரா டிவெலொப்மென்ட்
(பிரைவட்) லிமிடட்,
கம்பனிச் செயலாளர்.

3-567

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவிற்கமைய பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : கே எம் எஸ் அலுமினியம் (பிரைவட்) லிமிட்டட்
பதவிலக்கம்: பீவீ 00207699
திகதி: 2019.01.04
பதிவு முகவரி: இல.B027, பிரதான வீதி, ஏறாவூர்-01

எக்சன்ட் மெனேஜ்மன்ட் (பீவீடி)
எல்டிடி,
கம்பனிச் செயலாளர்.

3-576

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவிற்கமைய பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : என். ஐ. சீ. டிரேடிங் (பீவீடீ) எல்டீடி
பதவிலக்கம்: பீவீ 98697
திகதி: 2014.05.22
பதிவு முகவரி: இல.97/47, கனம்பிடிய வீதி, காலி

எக்சன்ட் மெனேஜ்மன்ட் (பீவீடி)
எல்டிடி,
கம்பனிச் செயலாளர்.

3-577

---

### அறிவித்தல்

மைக்ரோன் டெக் டிஸ்ட்ரிபியூஷன் (பிரைவேட்) லிமிடெட் என்கின்ற பெயர் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2)ஆம் பிரிவின் கீழ் எக்கோ பவர் டிஸ்ரிபியூஷன் (பிரைவேட்) லிமிடெட் எனத் திருத்தம் செய்யப்பட்டு 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 27 ஆந் திகதி முதல் பதிவு செய்யப்பட்டுள்ளது.-

கம்பனியின் முன்னைய பெயர் : மைக்ரோன் டெக் டிஸ்ட்ரிபியூஷன் (பிரைவேட்) லிமிடெட்
கம்பனி இலக்கம்: பீவீ 0132014
பதிவு செய்யப்பட்ட முகவரி: இல.21A, புத்கமுவ வீதி, கலபலுவாவ, ராஜகிரிய
கம்பனியின் புதிய பெயர் : எக்கோ பவர் டிஸ்ரிபியூஷன் (பிரைவேட்)லிமிடெட்

கம்பனிச் செயலாளர்.

3-665

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 11(5) இற்கமைய CEYLON LEATHER PRODUCTS MANUF ACTURERS ( PRIVATE) LIMITED எனும் கம்பனியான நிலைமை 2020 ஆம் ஆண்டு மாசி மாதம் 28 ஆந் திகதி நடை பெற்ற விசேட பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட விசேட தீர்மானத்தின்படி, CEYLON LEATHER PRODUCTS MANUFACTURERS LIMITED எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதனை இத்தால் அறியத்தருகின்றோம்.-

முன்னைய பெயர் : CEYLON LEATHER PRODUCTS MANUFACTURERS ( PRIVATE) LIMITED
கம்பனியின் தற்போதைய இல.: பீவீ 6857
பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி: இல 64, பெலும் மஹர, முதுன்கொட
கம்பனியின் புதிய பெயர் : CEYLON LEATHER PRODUCTS MANUFACTURERS LIMITED

நிறுவனத்தின் முகாமையாளர்,
கோ- சேர்வ் (பிரைவேட்) லிமிட்டெட்
கம்பனிச் செயலாளர்.

3-706

---

## அற்றோணி அதிகாரத்தை திரும்பப் பெறல்

ரொபேர்ட்டா காந்தி திஸ்ஸரா, இலக்கம் 94, டேபனம, பன்னிப்பிட்டிய , தற்போது வியோ டினோ டிஹானி , இலக்கம் 6, 37125, வெரோனா இத்தாலியில் வசித்துவரும் நான் பொது மக்களுக்கு அறிவிப்பதாவது, ரொபேர்ட் கொன்ரேட் லெஸ்லி திஸ்ஸராவிற்கு, அதிகாரமளித்த அற்றோணிச் சான்றிதழ் இலக்கம் 760, 2016.03.31ஆந் திகதியிடப்பட்டது, ரஞ்சித் ஆராச்சிகே நோட்டரி , ஹோமாகம ஆல் திரும்ப பெறப்படு கின்றது. ஆகவே என்னால் கூறப்பட்ட ரொபேர்ட் கொன்ரேட் லெஸ்லி திஸ்ஸராவின் எந்த நடவடிக்கைக்கும் நான் பொறுப்பேற்க மாட்டேன்.

ரொபேர்ட்டா காந்தி திஸ்ஸரா.

3- 351

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

பேருவளை, பழைய வீதி, இல.21 மற்றும் அவுஸ்திரேலியா, குயீன்ஸ்லண்ட், பொன்சாய் கோர்ட் மெக்கே 4740 qld , இல. 14 ஐச் சேர்ந்த குலக்ரா தந்திலகே லிலானி டீ சில்வா பெரேரா ( 635881941V ஆம் இலக்க தேசிய அடையாள அட்டை உரித்தாளர்) இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் அறிவித்துக் கொள்வதாவது, பேருவளை, ஹெட்டிமுல்ல, 11 ஆம் லேன், இல. 63/11 ஐச் சேர்ந்த புடகொடகே டொன் ரட்ணசிரிக்கு (492873187V ஆம் இலக்க தேசிய அடையாள அட்டையின் உரித்தாளர்) என்னால் வழங்கப்பட்ட மற்றும் எனது அற்றோணி தத்துவதாரராக நியமிக்கப்பட்ட, கொழும்பு மாவட்ட பிரசித்த நொத்தாரிசு மற்றும் சட்டத்தரணி திரு. பி. விஜேசிங்கவால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2018.01.28ஆந் திகதியிடப்பட்ட 26 ஆம் இலக்க அற்றோணித் தத்துவம் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இத்தால் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்பட்டு மற்றும் செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளது என்பதாகும்.

குலக்ரா தந்திலகே லிலானி டீ சில்வா பெரேரா.

2020.02.01.

3- 375

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இத்தால் சகலரும் அறிக, ஐக்கிய இராச்சியத்தில் அரச சாசனத்தால் முறையாக கூட்டிணைக்கப்பட்ட ( பதிவு ஈகை இல. 292786) கூட்டிணைப்பு நிறுவனமும் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தை சுவிண்டன் UK SN2 IFA UK நோர்த் அவென்யு நோர்த் ஸ்டார் ஹவுஸ் புளக் D முதலாம் மாடியில் கொண்டுள்துமான பிரிட்டிஸ் கம்பியுட்டர் சொசைட்டி ஆகிய இந் நிறுவனம் லண்டன் பிரசித்த நொத்தாரிசு எட்வாட் காடினர் அவர்களால் எழுதி அத்தாட்சிப்படுத்திய 2007, ஒற்றோபர் 11 ஆந் திகதியைக் கொண்ட அற்றோணித் தத்துவ வழங்குனரானவர். அற்றோணி தத்துவக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் 2007, ஒற்றோபர் 11ஆம் திகதியிட்டு விதானகே அனுருத்த சந்றனதா பெரேரா அவர்களுக்கு வழங்கப்பட்ட மேற்படி அற்றோணித் தத்துவம் இரத்துச் செய்யப்படுகிறது என பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2020.02.01.

3- 511

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல.124/13, வாரியபொல, கடுதெனிய, மாத்தளை எனும் முகவரியில் வசிக்கும் கெப்ரியல் ஜோசப் சுரேந்திர ராஜ் (தெ.அ.அ.இல.820043200V) ஆகிய நான், இலங்கைக் குடியரசின் அனைவருக்கும் தெரிவிப்பதாவது, ரா.மணி வண்ணன் பிரசித்த நொத்தாரிசினால் 6940 ஆம் இலக்கத்தில் சான்றுப்படுத்தப்பட்டு 2015.01.23 ஆந் திகதியில் மேரி வினிப்ரீடா சுரேந்திரராஜ்( தே.அ.அ.இல. 837402450V) என்பவருக்கு வழங்கப்பட்ட விசேட அற்றோணித் தத்துவம் இத்தால் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

கெப்ரியல் ஜோசப் சுரேந்திர ராஜ் .

2020.02.22.

3- 733

# ஏல விற்பனைகள்

## சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான ஏல விற்பனை அறிவித்தல்*

என் வீ எம் குணதாச

கணக்கு இல. *1064 5758 4989*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2019.12.19ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2020.02.28 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும்* (Gazette)*2020.02.15ஆந் திகதிய "திவயின"* (Divaina), *"ஐலண்ட்"* (Island), *"தினக் குரல்"*(Thinakkural) *ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான தொண்ணூற்றி ஒரு இலட்சத்து பனிரெண்டாயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்தி இரண்டு ரூபா முப்பத்தி ஐந்து சதம் (ரூபா 91,12,972.35) 2019, நவெம்பர் 27ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை எண்பத்தி ஆறு இலட்சத்து இருபத்தி இரண்டாயிரத்து இருநூற்று தொண்ணூற்றி நான்கு ரூபா முப்பத்தி ஐந்து சதம் (ரூபா 86,22,294.35) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதிமூன்று தசம் ஐந்து வீதம் (13.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 3402 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் 2020.04.06ஆந் திகதி மு.ப. 11.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது".*

### அட்டவணை

*சப்பிரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டம், கந்தொலாஹா பத்துவை பெலிகல் கோரளே கலிகமுவ பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் பானகவ கிராம அலுவலர் பிரிவின் பானகவையில் அமைந்த "ஹப்புகாஹாமுலஹேன, பக்மீகாஹாமுலஹேன, ரத்மல்காஹாமுலஹேன மற்றும் அலவத்துபிட்டியெஹேன" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ. சீ. பீ. குணசேன என்பவரால் தயாரிக் கப்பட்ட 2007, மாச்சு 04 ஆந் திகதியிடப்பட்ட இல. 2640 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: வீதி மற்றும் பொல்காஹாவெலை முதல் கேகாலை வரையான பெருந்தெரு ; கிழக்கு : பொல்காஹாவெலை முதல் கேகாலை வரையான பெருந்தெரு ; தெற்கு : உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஜே. அலுவிஹாரையில் வழக்கு இல. 10817 உடன் சம்பந்தப்பட்ட இல. 2474 எனும் வரைபடத்தின் லொட் 7 மற்றும் ; மேற்கு : இல.* G *60 எனும் வரைபடத்தின் லொட் 2, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் மற்றும் இருபத்தி ஐந்து தசம் ஆறு ஐந்து பேர்ச் (0ஏ. 1றூ. 25.65பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 2640 எனும் வரைபடத்திற்கு அமைவாக கேகாலை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம்* J *145/55 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*இல. 2640 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட வீதியின் ஊடாகவும் அதன் மீதும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளுடனானது.*

*பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,*

*கம்பனிச் செயலாளர்.*

*3-584*

---

## சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான ஏல விற்பனை அறிவித்தல்*

எச் எல் ஏ மதுஷங்க

கணக்கு இல. *1029 5709 8940*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2019.11.28ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2020.02.21 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும்* (Gazette)*2020.02.12ஆந் திகதிய "திவயின"* (Divaina), *"ஐலண்ட்"* (Island), *"தினக்குரல்"* (Thinakkural) *ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான எண்பத்தி நான்கு இலட்சத்து முப்பத்தி இரண்டாயிரத்து நூற்று பதினேழு ரூபா பதினாறு சதம் (ரூபா 84,32,117.16) 2019, ஒற்றோபர் 30 ஆந் திகதி முதல் அறவிடப்பட*

வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை எழுபத்தி எட்டு இலட்சத்து ஐம்பத்தெட்டாயிரத்து நூற்று நாற்பத்தி இரண்டு ரூபா முப்பத்திரண்டு சதம் (ரூபா 78,58,142.32) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதிமூன்று தசம் ஐந்து வீதம் (13.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 2678 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2020.04.02ஆந் திகதி மு.ப. 11.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது".

அட்டவணை

வட மேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், வடக்கு பிட்டிகல் கோரளே முன்னேஸ்வரம் பத்துவின் சிலாபம் பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் மாதம்பே பிரதேச செயலாளர் பிரிவின் கலஹிட்டியாவ கிராம அலுவலர் பிரிவின் கருக்குவ கிராமத்தில் அமைந்த "கருக்குவ வளவ்வ எஸ்ட்டேட்" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யூ. எஸ். ஏ பொன்சேக்கா என்பவரால் தயாரிக்கப்பட்ட 2012, யூலை 07ஆந் திகதியிடப்பட்ட இல. 0084 E எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கிற்கு பிரதேச சபை வீதி (உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ.ஜீ. எஸ். பீ. பராக்ரம என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 239 B எனும் வரைபடத்தின் லொட் 108) ;கிழக்கிற்கு பிரதேச சபை வீதி (உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ. ஜீ. எஸ். பீ. பராக்ரம என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 239 B எனும் வரைபடத்தின் லொட் 108), தெற்கிற்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ. ஜீ. எஸ். பீ. பராக்ரம என்பவால் தயாரிக்கப்பட்ட இல. 239B எனும் வரைபடத்தின் லொட்கள் 4 மற்றும் 5 மேற்கிற்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ. ஜீ. எஸ். பீ. பராக்ரம என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 239 B எனும் வரைபடத்தின் லொட் 10, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இருபது தசம் ஒரு பேர்ச் (0ஏ. 0றூ. 20.1பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதற்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 0084 E எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

கூறப்பட்ட இலக்கம் 0084 E எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 1 கீழே நேர்த்தியாக விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும்:

கூறப்பட்ட கருக்குவ கிராமத்தில் அமைந்த "கருக்குவ வளவ்வ எஸ்ட்டேட்" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ. ஜீ. எஸ். பீ. பராக்ரம என்பவரால் தயாரிக்கப்பட்ட 1992, யூன் 01ஆந் திகதியிடப்பட்ட இல. 239B எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 9 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கிற்கு: லொட் 108; கிழக்கிற்கு : லொட் 108 ; தெற்கிற்கு: லொட்கள் 4 மற்றும் 5 மற்றும் மேற்கிற்கு : லொட் 10, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இருபது தசம் ஒரு பேர்ச் (0ஏ. 0றூ. 20.1பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதற்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 239 B எனும் வரைபடத்திற்கு அமைவாக சிலாபம் காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் F 85/109 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கூறப்பட்ட இலக்கம் 239 B எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 108 ஊடாகவும் அதன் மீதும் மேலும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளும் மற்றும் அதனுடன் இணைந்த ஏனைய அனைத்து உரிமைகளுடனானது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

3-585

---

**ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ –குண்டசாலை கிளை**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் பகிரங்க ஏல விற்பனை

**மிகவும் பெறுமதிமிக்க வியாபாரச் சொத்து கண்டி மாவட்டம், குண்டசாலை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட நத்தரம்பொத்த 684 கிராம அலுவலர் பிரிவில் நத்தரம் பொத்த கிராமத்தில் அமைந்துள்ள "தம்பகஹவத்த" எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் C.D. ஆதிஹெட்டி என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2016.01.08ஆந் திகதிய 5940ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 01 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டும் அதனுள்ளடங்கும் மாடிக் கட்டிடமும், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது 27.46 பேர்ச். பரப்பளவானது.**

**இவ்வாதனம் விஜய குமார் வினோதினி மற்றும் பாலசந்திரன் செந்தில் குமார் ஆகியோர் கடப்பாடுடையவராக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.**

**ஆதனத்தை வந்தடைதல்.** - கண்டி நகர மத்தியிலிருந்து மஹியங்கனை பாதையில் சுமார் 4.25 கி.மீ. தூரம் நத்தரம்பொத அரங்கல பாதை சந்தி வரை வந்து இடது பக்கமாக திரும்பி மெனிக்ஹின்ன 626 ஆம் பாதைக்கு பிரவேசித்து அப்பாதையில்

சுமார் 50 மீற்றர் தூரம் சென்றால் இப்பாதையில் வலதுபக்கத்தில் பாதையின் எல்லையில் இவ்வாதனம் அமைந்துள்ளது.

கீழ் விபரிக்கப்பட்ட ஆதனத்தை 2020.04.06ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு என்னால் அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக.-** 2018.07.06 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், 2018.07.13 ஆந் திகதிய "லக்பிம", "டெயிலி மிரர்" மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை.-** விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப் பனவுகள் ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்:-

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;
(2) பிரதேச சபை வரி 1 % ( நூற்றுக்கு ஒன்று);
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை) ;
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் ;
(6) நொத்தாரிசுக் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் 2,000 ரூபா.

கொள்முதலில் மிகுதி 90% இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்பட இருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு : சிரேஷ்ட முகாமையாளர், (வர்த்தக அறவிடுதல் பிரிவு) ஹற்றன் நஷனல் வங்கி பீ எல் சீ , இல. 479, ரி.பி.ஜாயா மாவத்தை, கொழும்பு 10. தொலைபேசி: 011-2661835, 011- 2661836.

ஐ. டபிள்யு. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம்
பெற்ற ஏல விற்பனையாளர்.

இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல வீதி,
மாவில்மடை,
கண்டி.

தொலைபேசி இல.: 081-2210595, 071-8446374, 071-4962449.

3 - 540

## தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9ஆம் பிரிவின்கீழ் பகிரங்க ஏல விற்பனை*

மிகவும் பெறுமதிமிக்க வசிப்பிடத்துக்குப் பொருத்தமான சொத்து

